வீட்டுக்குள் நுழைந்த ஜகதீசன் எதிரே வந்த சுசீலாவிடமிருந்த தன் அருமை மைந்தனை வாங்கி மார்புறத் தழுவிக்கொண்டான். கடந்த வருஷம் தீபாவளி தினமா, இந்த வருஷம் தீபாவளி தினமா!— இதில் எது உயர்ந்தது என்று அவனால் கூற முடியவில்லை.

# வில் வண்டி

டாண் டாண் என்று ஒலித்த அந்தக் கடைசி மணி ஓசையைக் கேட்ட தங்கவேலன் புத்தகப் பையைத் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு பெஞ்சியை விட்டுத் துள்ளி எழுந்து நின்றான். ''அடேயப்பா, வகுப்பு முடிவதற்குள் இத்தனை அவசரமா உனக்கு?'' என்று சித்திர உபாத்தியாயர் அவனைப் பார்த்துப் பரிகாசமாகக் கேட்டதும், வகுப்பில் கலீர் என்று ஒரு நகைப்பு ஒலி எழுந்தது. 'கட்டை வண்டி மைனர்!' குப்பை வண்டி மைனர்!' என்று அட்டகாசமான சிறு குரல்கள் சிரிப்பொலியின் நடுவே கிரீச்சிட்டு ஒலித்தன.

''கட்டை வண்டி மைனர்! அது என்னடா புதுப் பெயர் தங்கவேலனுக்கு?'' என்று ஆச்சரியத்துடன் வினவிய உபாத்தியாயர் மேஜைமீது கிடந்த அங்கவஸ்திரத்தை உதறித் தோள்மீது போட்டுக்கொண்டார்.

''அதுதான் சார், நாங்க தங்கவேலனுக்கு வைத்திருக்கும் புதுப்பெயர். அவன் அப்பா கண்ணுசாமியிடம் ஒரு மொட்டை வண்டி இருக்கிறது. அதிலேதான் அவர் குப்பையை ஏற்றிக்கொண்டு நிலங்களுக்கு எருப்போடச் செல்வார். அதிலே இவனும் ஏறிக்கொண்டு சில சமயம் பள்ளிக்கூடம் வருவான். அதனாலே இவனுக்கு அந்தப் பேர் வைத்தோம்'' என்று சிரித்தான் பெரிய பண்ணையார் செல்வப் பேரன் கனகதுரை. அவன் ஏதோ பெரிய



ஹாஸ்யத்தைக் கூறிவிட்டதைப் போன்று அவனுடைய நண்பர்கள் நகைத்தனர்.

பண்ணையார் ராஜசேகரம் பிள்ளையின் தர்மத்தினாலும் முயற்சியாலும் நிறுவப்பட்டது, பிசிலம்பட்டி பண்ணையார் எலிமெண்டரி பள்ளிக்கூடம். பண்ணையாரின் செல்லப் பேரன் என்ற சொல்வாக்கிற்குப் பயந்த உபாத்தியாயர் கனகதுரையை அதிகம் கடிந்துகொள்வதே இல்லை. இருந்தபோதிலும் வகுப்பிலே மிக்க புத்தி சாலியான தங்கவேலனை மற்றப் பையன்கள் பரிகசித்துச் சிரித்ததை அவர் ரஸிக்கவில்லை. ''சேச்சே! கனகதுரை! நீ அப்படியெல்லாம் பெயரிட்டு அழைக்கக் கூடாதப்பா! வில் வண்டிக்கும் மோட்டார் வண்டிக்கும் ஏழைகள் எங்கே போவார்கள்?'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

பள்ளிப் பிள்ளைகள் வகுப்பு அறையினின்று விழுந்தடித்துக்கொண்டு கலைந்தோட ஆரம்பித்தபோது தங்கவேலன் மட்டும் புத்தகப் பையைத் தோளில் மாட்டிக்கொண்டு துக்கம் நெஞ்சை அடைக்க, கண்களில் நீர் சுரக்க, உதடுகள் துடிக்க, வெளியே போக மனமின்றிச் செயலற்று நின்றான். 'ஏழைகள் மோட்டார் வண்டிக்கு எங்கே போவார்கள்?' என்ற உபாத்தியாயரின் அந்த வார்த்தைகள் அவன் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

வெகு நேரம் அதே நிலையில் இருந்துவிட்டு இருட்டும் சமயம் வீட்டை நோக்கி ஓடினான். குற்றவாளியைப்போல் சுற்று முற்றும் விழித்துக்கொண்டே தோட்டத்து வேலிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் அவன். கிணற்றடியில் நின்ற தந்தையின் முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

வழக்கம்போல் கண்ணுசாமி வெற்றிலைக் கொடிக்காலில் வேலை செய்துவிட்டு அப்பொழுதுதான் வீடு திரும்பியிருந்தான். வேலையினால் அழுக்கடைந்திருந்த வேஷ்டிக்குச் சோப்புப் போட்டுக் கிணற்றடியில் துவைத்துக்

கொண்டிருந்த அவன், ''டேய் தங்கவேலு! என்னடா பொண்ணு கணக்கா தலையைக் குனிஞ்சுக்கிட்டு உள்ளே ஓடறே! இங்கே வாடா!'' என்று அன்புடன் அழைத்தான்.

முகத்தையும் கால்களையும் அவசரமாகக் கழுவிக் கொண்ட தங்கவேலன் நிற்காமலே உள்ளே ஓடிவிட்டான். இதுவரை அடக்கி வைத்திருந்த துக்கத்தை அதற்கு மேல் கட்டுப்படுத்த இயலாது, முற்றத்தில் கிடந்த கயிற்றுக் கட்டிலின்மீது விழுந்து, அவன் வாய்விட்டு விம்மி அழுதான்.

அன்று காலை பண்ணையார் செல்லப்பேரன் கனகதுரைக்குப் பிறந்த நாள். வழக்கம்போல் வில் வண்டியில் பள்ளிக்கூடத்திற்கு வராமல் சில தினங்களுக்கு முன் அவனுடைய தாத்தா வாங்கியிருந்த புத்தம் புதிய நீலநிறக் காரில் அவன் அன்று வந்து இறங்கினான். கனகதுரையின் அன்றைய அலங்காரத்தையே கண்கொட்டாது எல்லாப் பிள்ளைகளும் பார்த்துக்கொண்டு நின்றனர். வெண்ணிறப் பட்டுச் சொக்காயும், சரிகைக் கரை போட்ட வேஷ்டியும் அணிந்திருந்த கனகதுரையின் தலைமீது பூசியிருந்த வாசனை எண்ணெய் அவன் வகுப்புக்குள் நுழையும் பொழுதே கம்மென நாலாபுறமும் மணம் வீசிக்கொண்டிருந்தது. கனகதுரை பெருமையாக வகுப்பின் நடுவிலே உட்கார்ந்துகொண்டான். அவனைச் சூழ்ந்துகொண்டு நின்ற நண்பர்கள் ஆனந்தத்துடன், ''கனகதுரை! உங்கள் வீட்டில் மோட்டார் வண்டி வாங்கியிருக்காங்களா?'' என விசாரித்தனர். ''ஆமாம்'' என்று அழுத்தந் திருத்தமாகப் பதிலளித்தான் பண்ணையார் பேரன். ''என்ன விலையடா?'' என்று ஆவலுடன் வினவினான் இன்னொரு சிறுவன். பத்து விரல்களையும் பிரித்துக் காட்டிய கனகதுரை, ''இவ்வளவு ஆயிரம் ரூபாய்களடா! தெரியுமா?'' என்றான் பெருமையுடன்.



பிறகு கார் செல்லும் வேகத்தைப் பற்றியும், அதனுடைய அருமை பெருமைகளைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்து அறிவித்துக்கொண்டிருந்தான் அவன். கண்களை அகல விரித்தபடி வாயை மூட மறந்து ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அந்தப் பிள்ளைகள்.

முடிவில் கனகதுரை பெருமை பொங்கும் குரலில், ''என்னுடைய காரில் ஐவந்தியூர்த் திருவிழாவுக்கு என்னுடன் எல்லோரையும் அழைத்துப் போகிறேன். வர ஆசையுள்ளவர்கள் கையைத் தூக்குங்கள்!'' என்றான்.

தங்கவேலுவைத் தவிர மற்றப் பிள்ளைகள் எல்லோரும் கையைத் தூக்கவே, கனகதுரை கடுமையாக, ''தங்கவேல்! நீ வரவில்லையாடா?'' என்று கேட்டான்.

''அவனா? அவன் எதற்கு நம்முடன் வருவான்? அவர்கள் வீட்டில் உங்கள் காரைவிட வேகமாகப் போகும் மொட்டைவண்டி இருக்கிறதே!'' என்றான் பண்ணையார் வீட்டில் மானேஜர் வேலை பார்க்கும் பொன்னன் மகன் முத்தையன். அவன் வீட்டில் மோட்டார் கார் இல்லாவிட்டாலும், பச்சை நிறம் பூசிய அழகிய வில்வண்டி ஒன்று இருந்தது. அந்தக் கர்வத்தில் அவன் தங்கவேலனைக் கேலி செய்தான். அவன் கூறியதை ஆதாரமாகக்கொண்டு வகுப்பிற்குள் உபாத்தியாயர் வரும் வரையில் பள்ளிப் பிள்ளைகள் தங்கவேலனை, ''கட்டை வண்டி மைனர், குப்பை வண்டி மைனர், மொட்டை வண்டி மைனர்'' என்று கூவியழைத்துக் கேலி செய்து மகிழ்ந்தனர்.

முற்றத்துக் கயிற்றுக் கட்டிலில் புரண்டவண்ணம் அன்றையச் சம்பவங்களை நினைத்துப் பார்த்த தங்கவேலனுக்குச் சோகமும் துயரமும் அடங்கவில்லை. தன் தந்தை ஈனமான அந்த வேலையை ஏன் செய்கிறார்? ஊரிலுள்ளவர்கள் வீட்டுத் தோட்டத்தில் வந்து குவிந்து கிடக்கும் குப்பையையும் கூளத்தையும் வாரி வண்டியில் ஏற்றிச்

செல்வதனால்தானே அவன் வண்டியைப் பற்றிப் பிள்ளைகள் பழித்தனர்? குப்பை வண்டியோட்டும் கண்ணுசாமி குப்பைக்காரன்; அவன் மகன் தங்கவேலன் குப்பைவண்டி மைனர்!—என்று ஓடியது அவனது சிந்தனை. கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் கன்னத்தைச்சுடவே, சட்டென்று துடைத்துக்கொண்டான் தங்கவேலன்.

குளித்துவிட்டு வேற்றுடை உடுத்துக்கொண்டு முற்றத்திற்கு வந்த கண்ணுசாமி, ''வாசனை மூக்கைத் துளைக்குதே! வெங்காயக் குழம்பா?'' என்று இரைந்து கேட்டான்.

''உங்க செல்ல மகனுக்கு வெங்காயக் குழம்புன்னா உயிர் ஆச்சுதே! அதனாலே இன்னிக்கு வச்சேன்!'' என உள்ளிருந்தபடி பதில் அளித்தாள் அவன் மனைவி செங்கமலம்.

''உங்க மகன்தான் ஒசத்தியாயிட்டான். நான் கேட்டால் செய்து போட்டிருப்பியா?'' என்று பரிகாசமாக வினவினான் தந்தை.

''உங்களுக்குப் பிடிச்ச கத்தரிக்காய்ப் பொறியலுந்தான் செய்து . வைத்திருக்கிறேன். கொஞ்சம் சீக்கிரமாகச் சாப்பிட வந்துவிடுங்கள்'' என மிடுக்காக உத்தரவு போட்டாள் செங்கமலம்.

கயிற்றுக்கட்டிலின் மேல் வந்து உட்கார்ந்த கண்ணுசாமி, மகனின் முதுகை அன்புடன் வருடினான். ''தங்கப்பா! தூங்குகிறாயாடா! எழுந்திருடா, ராசாப் பயலே! சாப்பிட நேரமாவல்லை?'' என்று அழைத்தான் அருமையாக.

தந்தையின் அதீதமான அன்பு அது சமயம் தங்கவேலனுக்கு விஷயமாகத் தோன்றியது. வெறுப்பும் துயரமும் குடிகொண்டிருந்த அவனது இள உள்ளம் தந்தையின் யின் வாஞ்சையைப் பகிர்ந்துகொள்ள மறுத்தது. ''நான் வரேன் போ!'' என்று முணுமுணுத்துவிட்டுத் திரும்பிப்



படுத்துக்கொண்டான் அவன். இலையில் போய் உட்கார்ந்த கண்ணுசாமி மகன் எழுந்து வராததைக் கண்டு, ''டேய் தங்கக்கண்ணு! வாடா, தூங்கு மூஞ்சி!'' என உள்ளிருந்தபடியே இரைந்து கூப்பிட்டான்.

''நீங்க சும்மா இருங்க! நான் போய் அந்தக் கழுதையை நெட்டித் தள்ளிக்கொண்டு வரேன்'' என்று பதில் அளித்த செங்கமலம் பரிமாறிக்கொண்டிருந்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு முற்றத்தை நோக்கிச் சென்றாள்.

''டேய்! என்னடா பொய்த் தூக்கம்! ராஜா மவன் போல ராயசம் பண்ணுறயோ! எளுந்திரு!'' என்று பிள்ளையின் கையைப் பற்றி இழுத்தாள்.

தாயார் பிடியினின்றி முரண்டிக்கொண்டு கீழே குதித்து, தங்கவேலன் ஆத்திரமாக இலையின் முன் போய் உட்கார்ந்தான். உண்மையிலேயே அவனுக்குப் பசி வயிற்றைக் கிண்டியது. குழம்பின் மணம் நாசியைத் துளைத்தது. இருந்தபோதிலும் உள்ளத்திலே குமுறிக்கொண்டிருந்த கோபத்தில் சாப்பிடவே அவனுக்கு மனமில்லை.

''ஏண்டா கண்ணும் மூக்கும் இப்படிச் சிவந்து கிடக்கு?'' என்று வினவிய செங்கமலம், பிள்ளையை உற்றுப் பார்த்தாள். ''அழுதிருப்பான்! ஏண்டா அழுதே! என்னத்துக்கு அழுதியாம்?'' என்று தந்தை தொடர்ந்தாற்போல் கேட்ட கேள்விகளுக்கு உத்தரம் அளிக்க இஷ்டப்படாதவன்போல் இரண்டு வாயில் சோற்றை அள்ளிப் போட்டுக்கொண்டு, கை கழுவ வெளியே ஓடிவிட்டான்.

சாப்பாடு முடிந்ததும், வாயிற் பக்கம் சென்ற கண்ணுசாமி தங்கவேலனை இழுத்து வைத்துக்கொண்டு, ''அதுக்குள்ளே தூங்க ஆரம்பிச்சுடாதே! நெல்லிப்பாளையம் டூரிங் கொட்டாயிலே நல்ல ஆட்டம் ஒன்று வந்திருக்குது. உங்களை இப்ப கூட்டிக்கொண்டு போகிறேன், தெரியுமா?'' எனக் கூறினான் உற்சாகத்துடன்.

''தூக்கம் வருது. நான் வரவில்லை, போ!'' என்று தங்கவேலன் அரை மனசுடன் முணுமுணுத்தான் பதிலுக்கு.

''வண்டியிலே படுத்து நிம்மதியா தூங்கிக்கொண்டு வாடா! கொட்டகை கிட்ட வந்ததும் எழுப்பிவிடுகிறேன்'' என்றான் விடாப்பிடியாகத் தந்தை.

''வண்டியிலா! நான் வரலை! அந்தக் குப்பை வண்டியிலே நான் வரமுடியாது!'' என்று திடீரென்று ஆத்திரத்துடன் கத்தினான் தங்கவேலன்.

ஆனால் கண்ணுசாமி அவனை விடவில்லை. குறிப்பிட்ட நேரத்துக்கு மூவரும் சினிமாக் கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தனர். தாயின் தோள்மீது சாய்ந்துகொண்டு தரையில் உட்கார்ந்திருந்த தங்கவேலன், படம் ஆரம்பமான சில நிமிஷங்களில் தன் கோபத்தை மறந்து விட்டான். படத்திலே வந்த சில ஹாஸ்ய கட்டங்களை அநுபவித்துச் சிரிக்கக் கூடச் சிரித்தான். இடைவேளையின் பொழுது திரும்பி நாலா புறமும் எல்லோரையும் வேடிக்கை பார்த்த அவனது கண்கள், பின் வரிசையில் போடப்பட்டிருந்த நாற்காலிகளின் பக்கம் வந்து நிலைத்து நின்றுவிட்டன. முகம் சிவக்க, நெஞ்சம் பதற, அவமானம் தாங்க முடியாமல் சட்டென்று மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆனால், பண்ணையார் அருகில் கம்பீரமாக நாற்காலியில் வீற்றிருந்த கனகதுரை, தங்கவேலனை அடையாளம் கண்டு கொண்டு விட்டான். அங்கிருந்த படியே தன் கைக்குட்டையை ஆட்டி, ''தங்கவேல்! டேய் தங்கவேல்!'' என்று கீச்சுக் குரலில் உரக்கக் கூப்பிட்டான் அவன். அதற்குப் பின் தங்கவேலனுக்குப் படம் பார்க்கவே பிடிக்கவில்லை!

நல்ல வேளையாக ஐவந்தியூர்த் திருவிழாவையொட்டி அடுத்த நான்கு நாட்களும் அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு



விடுமுறையாக இருந்தது. தங்கவேலனும் நிம்மதியாக இருந்தான்.

அன்றுதான் திருவிழாவின் கடைசி நாள். இன்பமான கனவு ஒன்றிலே லயித்திருந்த தன்னைத் தாயார் தட்டி எழுப்புவதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்திருந்தான் தங்கவேலன்.

''நாங்கள் எல்லாரும் குளிச்சிட்டுத் தயாராயிருக்கோம். நீ இன்னும் தூங்கிட்டு கிடக்கறியே! தேர் பார்க்க வரலையாடா? உங்கப்பா வண்டி கட்டப் புறப்பட்டுட்டாரு. நீ ஒரு சொம்பு தண்ணியை ஊத்திக்கிட்டு, சட்டுப் புட்டுனு கிளம்பு'' என அதட்டினாள் செங்கமலம். பெட்டியிலே பத்திரமாகப் பூட்டியிருந்த கல்யாணச் சேலையை உடுத்துக் கொண்டிருந்த அவள், வாரி முடித்திருந்த கொண்டையில், கண்ணுசாமி வாங்கியளித்த மருக்கொழுந்தைச் செருகியவாறு நின்று கொண்டிருந்தாள்.

''வண்டி'' என்ற வார்த்தை, இருதயத்தின் அடியிலே அணையும் தறுவாயிலிருந்த அவனது ஆத்திரத்தைத் தூண்டிவிடவே, ''நான் திருவிழாவுக்கு வரலை! என்னைத் தொந்தரவு பண்ணாதே, போ'' என்று கத்தினான் தங்கவேலன்.

ஆனால், செங்கமலம் அவனைச் சும்மா விடுபவளாக இருக்கவில்லை. சாட்டையைக் கையில் பிடித்தபடி, வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு உல்லாச நடையுடன் உள்ளே வந்த கண்ணுசாமி தன் செல்வ மகனைச் செங்கமலம் குளிப்பாட்டிப் பலவந்தமாக ஆடை அணிவித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''அட! இன்னும் இவரு கிளம்பிலையா? வண்டி கட்டி நிக்குதே'' என்று வினவிய கண்ணுசாமி தனது அடர்ந்த மீசையை ஆசையுடன் தடவிக் கொடுத்துக்கொண்டான்.

''வண்டியாம் வண்டி! அந்தக் குப்பை வண்டியிலே நான் வரமாட்டேன். எனக்குப் பிடிக்கவில்லை அதில்

ஏறி வர! நான் பின்னாலே நடந்து வரேன்!'' என்றான் தங்கவேலன் உரத்த குரலில்.

''அடியாத்தே! உங்க மகனுக்கு மோட்டாக்காரு வேணுமாமே!'' என்று வாயில் ஆச்சரியத்துடன் கையை வைத்துக்கொண்டு நின்றாள் செங்கமலம்.

''அவரை என்ன நினைச்சுக்கிட்டே! அவரு பெரிய துரையல்ல! மொட்டை வண்டியிலே வருவாரா? வில் வண்டி, காரு, விமானம் இதுலேதான் போவாரு'' என்று கண்ணைச் சிமிட்டிய கண்ணுசாமி திடீரென்று, ''ஏண்டா! குப்பை அள்ளிப் பிழைக்கும் என் தொழில் உனக்குக் கேவலமாயிருக்குதாடா, நாயே! 'கண்ணுசாமிபிள்ளை' யினு சொல்லிக்க உனக்கு அவமானமாயிருக்குதாடா'' பதரே!'' என்று கோபத்துடன் உறுமிக்கொண்டே தங்கவேலனை இரும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு பளீர் என்று இரண்டு அறைகள் வைத்தான்.

''குழந்தையை அப்படிப் போட்டு அடிக்காதீங்க! விடுங்க அவனை'' என்று குறுக்கிட்டுக் கூச்சலிட்ட செங்கமலத்தின் கரங்களை உதறிய கண்ணுசாமி கோபத்துடன் 'விர்' என்று வாயிற்பக்கம் சென்றுவிட்டான்.

''அப்பாரு கிட்ட மரியாதையில்லாமெ பேசலாமாடா, தங்கதுரையே?'' என்று மகனை அனைத்துக்கொண்ட செங்கமலம் புடைவைத் தலைப்பால் தங்கவேலன் கண்ணீரைத் துடைத்துவிட்டுத் தன் கண்களையும் துடைத்துக்கொண்டாள்.

வண்டியில் ஏறிக்கொண்ட அவன், தந்தையின் முகத்தைப் பார்க்கவேயில்லை. அச்சமும் துயரமும் தாளாமல் வெகு நேரம்வரை தாயின் மடியிலே முகத்தைப் புதைத்துக்கொண்டு சப்தமிடாது அவன் கண்ணீர் விட்டுக் கொண்டே இருந்தான்.

செங்கமலம் அன்று வழக்கம்போல் களிப்புடன் கணவனிடம் ஏதும் பேசவில்லை. 'இல்லை', 'ஆம்' என்ற



வார்த்தைகளைத் தவிர அவளிடமிருந்து கண்ணுசாமி கேட்ட கேள்விகளுக்கு உத்தரம் ஏதும் வரவில்லை. தேர் புறப்பட்டுவிட்டது என்று ஜனங்கள் கூக்குரலிட்டனர். தன்னையும் மீறிய ஆவலில் தலை நிமிர்ந்து பார்த்த தங்கவேலன் தனக்கு முன் திரண்டு நின்ற ஜனத் திரளை மிரட்சியுடன்பார்த்தான். குற்றவாளியைப்போல்அதுவரை மகனை நேருக்கு நேர் சந்திக்க விரும்பாது இப்புறமும் அப்புறமும் பார்த்துக்கொண்டிருந்த கண்ணுசாமி, ''தேரு தெரியலையா, தங்கப்பா!'' என்று திடீரென வினவினான். அவன் முகத்தில் வெட்கம் கலந்ததொரு புன்னகை அரும்பி மறைந்தது. தங்கவேலன் பதிலளிக்கு முன் மைந்தனைத் தூக்கி எடுத்துத் தோளின் மீது உட்கார வைத்துக்கொண்டு, ''அதோ பார் தேர்; இப்ப நல்லாத் தெரியுதா?'' என்று கனிவுடன் கேட்டான். தங்கவேலனும் தலையைப் பலமாக ஆட்டினான்.

திருவிழாக் கடைகளில் செங்கமலம் சில சாமான்கள் வாங்கிக்கொண்டாள். தங்கவேலனுக்கு பலூன்களும் மிட்டாய்களும் வாங்கிக்கொடுத்தான் கண்ணுசாமி. குதூகலமாக அவர்கள் திரும்பும் சமயம், தன் பெயரை யாரோ சொல்லிக் கூப்பிடுவதை உணர்ந்த தங்கவேலன் திரும்பிப் பார்த்தான். மறுகணம் அவனுக்கு ஏன் பார்த்தோம் என்றுதான் இருந்தது. சிவப்பு நிற மிட்டாய் ஒன்றைச் சுவைத்துக்கொண்டு நின்ற பண்ணையார் பேரனையும் அவன் சகாக்களையும் கண்ட தங்கவேலனுக்குக் கிலியில் ரத்த ஓட்டமே நின்றுவிட்டது போலிருந்தது.

''டேய், தங்கவேலன் திருவிழாவுக்கு வந்திருக்கிறானடா!'' என்று கனகதுரை முத்தையனைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தான். ''அவங்க வீட்டு ஏரோப்பிளேனில் வந்திருப்பான்'' என்று இரைந்து சிரித்தான் முத்தையன்.

''மொட்டை வண்டி மைனர்! அடே குப்பை வண்டி மைனர்!'' என்று உரத்த குரலில் கிறீச்சிட்ட அவர்களைப்

பார்க்கப் பிடிக்காமல் தங்கவேலன் 'விர்' என்று கூட்டத்திற்குள் புகுந்து தங்கள் வண்டியை நோக்கி ஓட்டமாக ஓடினான்.

திடீரென்று ஏற்பட்ட தூக்கத்தினின்று அன்று இரவு விழித்துக்கொண்டான் தங்கவேலன். முற்றத்துக் குறட்டின்மீது தூணில் சாய்ந்துகொண்டிருந்த செங்கமலமும் அருகில் வீற்றிருந்த கண்ணுசாமியும் மெல்லப் பேசினாலும், இரவின் நிச்சப்தத்திலே மிதந்து வந்த அந்தப் பேச்சு ஒவ்வொன்றும் அவனுக்கு நன்றாகக் கேட்டது.

''ஐய! இது என்ன! எதுக்காக நீ அழுகிறே! உன் மகன் மேலே கைய வச்சு ரெண்டு தட்டுத் தட்டினது உனக்குப் பொறுக்கலை. அப்பாடி! அவன் உனக்குத்தான் மகன். எனக்குச் சொந்தமில்லை! இல்லையா? அவனை ஏண்டா அடிச்சேன்னு நான் மனசுக்குள்ளே பட்ட பாடு உனக்கு என்ன தெரியும்?''

''ஆசையிங்கறது யாருக்குத்தான் இல்லை! பணக்கார வீட்டுப் பொம்பளைகளைப்போல நகைநட்டு போட்டு பட்டுச்சேலை உடுத்தணும்னு எனக்குக்கூடத்தான் ஆசை இருக்குது. அவன் பச்சைக்குழந்தை! என்ன கண்டான்! பண்ணையார் பேரனைப்போல் வில் வண்டியிலும், மோட்டார் காரிலும் போக வேணுமின்னு ஆசைப் பட்டான்!''

''ஆசைப்படட்டும், வேண்டாங்கலை நான். ஆனால் நம்மகிட்ட இருக்கிற பொருளைப்பத்தி அவனுக்கு ஏன் இப்படி மனசிலே வெட்கம் தோணணும்? நாம ஒத்தரிடம் திருடினோமா? நெற்றி வேர்வை நிலத்தில் விழக் கஷ்டப் பட்டு உழைக்கிறோம்! இது தெரியலையே அவனுக்கு!''

''இதெல்லாம் அவனுக்குத் தெரியற வயசுங்களா? படிச்சு நல்ல அறிவு வந்த பெரியவர்களுக்கே இந்தப் புத்தி வரவில்லை. பத்து வயசுகூட ரொம்பாத பிள்ளை அவன் என்ன கண்டான்! குப்பை அள்ளுறது கேவலம்னு



அவனுக்குத் தோணிச்சு போல இருக்குது'' என்று நிறுத்திய அவள், ''இந்தப் பாவி வயித்தில் வந்து அவன் பிறக்க வேணாம். உண்டானப்பட்டவங்க வீட்டிலே பிறந்திருக்கலாம்!'' என்று விம்மியழுதாள்.

தாயின் வார்த்தைகள் தங்கவேலன் மனத்தை என்னவோ செய்தன. அவளது அழுகை ஒலி அவனது உள்ளத்தைப் பதறச் செய்தது. கண்களில் நீர் கசிய ஆரம்பித்தது. ''அம்மா! அழுவாதே அம்மா! தெரியாமே அப்படிச் சொல்லிவிட்டேன்'' என்று கத்திக்கொண்டு அவளது கழுத்தை அணைத்தபடி வாய்விட்டு அழவேண்டும் போல் துக்கம் நெஞ்சைப் பிளந்தது. ஆனால் அவனுக்கு ஏனோ எழுந்து அவளிடம் செல்லத் தைரியம் ஏற்பட வில்லை!

மறுநாள் காலை அவனால் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியவில்லை.

''குழந்தைக்குக் காய்ச்சல் அடிக்குதே! இங்கே வந்து பாருங்க!'' என்றாள் மகனைத் தொட்டுப் பார்த்த செங்கமலம் கவலையுடன்.

''காய்ச்சலா! திருவிழாவிலே வெய்யிலிலே சுற்றினது தங்கப்பயலுக்கு ஆகவில்லை போலிருக்குது!'' என்று பதிலளித்த கண்ணுசாமியின் வதனம் கவலையினால் சாம்பியது. கம்பளியை மடித்துக் கட்டிலின்மீது தட்டிப் போட்டு, தரையில் படுத்திருந்த மகனைப் பத்திரமாக எடுத்துக் கட்டிலின்மீது போட்டுவிட்டு, ''வைத்தியரைக் கூப்பிட்டு எதாச்சும் வாங்கிக் கொடுக்கணும்! ஊரு முழுவதும் காய்ச்சல்னு சொல்லிக்கிறாங்க'' என்று முணுமுணுத்தான்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. திருவிழாவுக்கு மறுநாள் ஜுரமாகப் படுத்த தங்கவேலனுக்குச் சில நாட்கள் தன் நினைவே இருக்கவில்லை. ஏதேதோ பிதற்றிக் கொண்டு கிடந்தான்.

அன்று இரவு தங்கவேலனுக்குத் திடீரென்று

விழிப்பு ஏற்பட்டது. காய்ந்துகொண்டிருந்த ஜுரம் தணிந்து போனதனால் குப்பென்று உடலெல்லாம் வியர்க்கவே போர்வையைத் தள்ளிவிட்டுப் புரண்டு படுத்தான். தாகம் என்று தண்ணீர் கேட்க முற்றத்தின் பக்கம் கண்களைத் திருப்பிய தங்கவேலன் வார்த்தைகள் தொண்டையிலே நின்றன. முற்றத்துக் குறட்டின்மீது முகத்தைக் கைகளில் தாங்கிய வண்ணம் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த கண்ணுசாமி உடல் குலுங்க அழுதுகொண்டிருந்தான்!

''ஐயோ பாவி, நான் எந்த வேளையிலே குழந்தையைத் தொட்டு அடித்தேனோ! கண்ணைத் திறக்காம கிடக்கிறானே! தெய்வம் என்னைச் சதிசெய்து விடும் போலிருக்குதே!'' என்று அரற்றினான் அவன்.

''இப்படி நீங்களே மனசைத் தளரவிடுறது நல்லாவா இருக்கு! நேற்றைக் காட்டிலும், இன்றைக்கு எவ்வளவோ காய்ச்சல் குறைந்திருக்கு. என்னை மாரியாத்தா கைவிட்டு விடமாட்டா'' என்று தைரியம் சொன்னாள் செங்கமலம்.

செத்துப் பிழைத்தான் தங்கவேலன் என்றுதான் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஒரு மாத காலத்திற்குப் பிறகு அவன் அன்று மீண்டும் பள்ளிக்கூடத்திற்குப் போனான்.

அவன் வரும்பொழுது வகுப்புத் துவங்கிவிட்டதனால் மற்றப் பிள்ளைகள் அவனிடம் எதுவும் பேசக்கூடவில்லை. பள்ளிக்கூடம் எப்பொழுது முடியும் என்று காத்திருந்தவர்கள்போல் மணியடித்ததும் எல்லோரும் அவனை வந்து சூழ்ந்துகொண்டனர்.

''டேய் குச்சியாட்டமா இளைத்துப் போயிட்டியேடா! தங்கவேலா, ஒரு மாதமாகக் காயிலாவிலாடா கிடந்தே?'' என்று அநுதாபத்துடன் விசாரித்தனர் சில பிள்ளைகள்.

பிள்ளைகளைத் தள்ளிக்கொண்டு, வந்து நின்ற கனக



துரை அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு, ''கட்டை வண்டி மைனரைக் காணாமல் என் கண் பூத்துப் போயிற்று!'' என்றான்.

அடியுண்ட புலிபோல் வெடுக்கெனத் தலையை நிமிர்த்தித் தீப்பொறி பறக்கும் கண்களால் பண்ணையார் பேரனை உற்றுப் பார்த்தான் தங்கவேலன். ''என்னடா சொன்னே? ஜாக்கிரதையாய்ப் பேசுடா! பல் உதிர்ந்து விடும்'' என்று மெலிந்த தனது சிறு கரத்தை மடக்கிக் கொண்டு முகத்தில் குத்தும் பாவனையில் நின்றான் ஆங்காரத்துடன் தங்கவேலன். திடீரென்று ஏற்பட்ட தைரியத்தில் தன்னை நோக்கிக் கேலி செய்து நகையாடிய அவ்வளவு பிள்ளைகளையும் மென்று தின்று விடுபவன் போல் விழித்துப் பார்த்தான் அவன்.

''அடேயப்பா! ரொம்பக் கையை வீசிறியே! உண்மையைத்தானே சொன்னேன்! உங்கள் அப்பன் குப்பைவண்டி ஓட்டும் குப்பைக்காரன் தானே!'' என்றான் துச்சமாகக் கனகதுரை.

''ஆமாம்! எங்க அப்பா குப்பை வண்டி யோட்டும் வேலைதான் செய்கிறார். அதில் என்னடா தப்பு! உங்க வீட்டில் வந்து திருடினாரா, வரண்டினாரா! உங்களிடத்தில் வந்து ஒருகால் பிச்சை கேட்டாரா? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைக்கிறதிலே என்னடா வெக்கம் வந்து விட்டது?'' என்று படபடவென்று உரத்த குரலில் கத்திய தங்கவேலன், எல்லோரையும் நிமிர்ந்து கம்பீரமாகப் பார்த்தான். தொழில், கௌரவம் என்றெல்லாம் விவரம் ஒன்றும் புரியாவிடினும் ஏனோ தங்கவேலன் மொழிகள் அந்த வாண்டுப் பையன்களைச் சட்டென்று வாயை மூடிக் கொள்ளச் செய்தன! பண்ணையார் பேரன் கனகதுரை நகத்தைக் கடித்துக்கொண்டு நண்பன் முத்தையனைப் பார்த்துத் திருதிருவென விழித்தான் குற்றவாளியைப் போல். சமீபத்தில் தாத்தாவுடன் அவன் பார்த்த ஒரு

சினிமா அவன் ஞாபகத்திற்கு வந்தது. ''ஜாதியில் என்ன இருக்கிறது! பிறப்பில் என்ன இருக்கிறது! தொழிலில் அகௌரவம் என்ன இருக்கிறது! எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்று தொண்டை கிழியக் கையைத் தூக்கி ஆட்டிக் கத்திக்கொண்டு வந்த சினிமா கதாநாயகன் ஞாபகம் அவனுக்கு வரவே, அவனது அரட்டல் பேச்சுக்கள், திடீரென்று ஓய்வு எடுத்துக் கொண்டன. துடுக்குத்தனமாகப் பேசும் கனகதுரையே தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டதைக் கண்ட மற்றப் பிள்ளைகள் மௌனம் சாதித்தனர்.

அதுதான் தருணம் என்று நினைத்தவன்போல் தங்கவேலன், ''இனிமேல் என்னை யாராவது குப்பை வண்டிக்காரன் என்று கூப்பிடுங்கள், சொல்கிறேன்!'' என்று கையை ஆட்டிவிட்டுப் புத்தகப் பையைத் தோளில் போட்டுக்கொண்டு நிமிர்ந்து அலட்சியமாக நடந்து வீட்டை நோக்கிச் சென்றான்.

சின்ன வாய்க்காங்கரை மேட்டருகில் வந்ததும் தங்கவேலன் சுற்றுமுற்றும் பார்த்தான். சற்றுத் தொலைவில், கண்ணுசாமி காலைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்ட தங்கவேலன் நெஞ்சம் துணுக்குற்றது. ஓட்டமாக ஓடித் தன் தந்தையை அணுகி, ''என்னப்பா!'' என்று கேட்டான் ஆவலுடன்.

உள்ளங் காலில் பதித்திருந்த பீங்கான் ஓட்டைப் பிடுங்கி எறிந்த கண்ணுசாமி, குபுகுபு வென்று ரத்தம் பொங்கி வழிந்த காயத்தைக் கைகளால் அமுக்கிக் கொண்டே, ''அந்த எரு குப்பையில் கண்ணாடி இருந்தது போலிருக்கு! காலில் நல்லா ஏறிச்சு'' என்றான்.

''ரத்தம் கொட்டுதே, அப்பா!'' என்று அச்சத்துடன் கூவிய மைந்தன், சடசடவென்று தகப்பன் தலை முண்டாசுத் துணியைக் கிழித்துப் பாதத்தின்மீது அழுத்த



மாக ஒரு கட்டுப் போட்டான். சற்றுக் குணம் கண்ட கண்ணுசாமி, மைந்தன் தோள்மீது மெல்லத் தட்டி, ''அதோ பார், தங்கப்பா! நல்லா இருக்குதா சொல்லு!'' என்றான். தந்தை சுட்டிக்காட்டிய திக்கைத் திரும்பிப் பார்த்த மைந்தனது விழிகள் ஆச்சரியத்தில் தெறித்து விடும்போல் அகன்றன. ''ஏதப்பா இந்த வில் வண்டி!'' என்று உற்சாகத்துடன் கூவினான் தங்கவேலன்.

''இன்றைக்கு மத்தியானந்தான் மானேஜர் ஐயாகிட்டே வாங்கினேன். நீ நிதமும் அதிலே ஏறிக்கொண்டு போகலாம்'' என்றான் கண்ணுசாமி.

தந்தை தன்னிடம் காட்டிய அன்பைக் கண்டு தங்கவேலனது உள்ளம் உருகியது. என்னவெல்லாமோ சொல்ல வேண்டுமென்று அவன் உதடுகள் துடித்தன. ஆனால் என்ன கூறுவதென அவனுக்கு விளங்கவில்லை. ''அப்பா! அம்மாவுக்கு வில் வண்டியைக் காட்டலாம், வரயா?'' என்றான் முடிவில்.

''வேலை இருக்குதே, தங்கதுரையே! மானேஜர் ஐயா கொடிக்காலுக்கு இந்த வண்டி எருவை எடுத்துக்கொட்ட வேணுமே! பாதி வேலையில் வீட்டுக்கு எப்படிப் போகிறது?'' என்று கேட்டான் தந்தை.

''காலிலே உனக்குக் காயம்பட்டுடிச்சே! எப்படியப்பா நடந்து போவே?'' என்று கேட்ட மைந்தன் சட்டென்று புத்தகப் பையைத் தரைமீது கிடத்திவிட்டு வேஷ்டியை இழுத்துக் கட்டிக் கொண்டான், ''இரு; அப்பா! நீ நடக்க வேண்டாம்; வண்டியிலிருந்து கூடையில் எருவை நிரப்பிக் கொடு. நான் தோட்டத்து மேட்டில் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு வரேன்'' என்று பெரிய மனிதர்போல் கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்தான்.

''உன் மேலெல்லாம் அழுக்காகப் போயிடுமடா; உனக்கு ஏன் இந்த அவதி?'' என்று தந்தை கேட்டதைத் தங்கவேலன் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை.

ஒரு கூடையைத் தலையில் சுமந்துகொண்டு அவன் விடுவிடுவென்று தோட்டத்து மேட்டை நோக்கிப் போன தைப் பார்த்த கண்ணுசாமியின் உள்ளம் கட்டுக்கு அடங் காமல் பூரித்தது.

# இழந்தது யார்?

வண்டி புறப்படச் சில நிமிஷங்கள்தாம் இருந்தன.

கௌசல்யா தன் கடிகாரத்தை உற்றுப் பார்த்துவிட்டு அருகில் நின்ற தன் சிநேகிதி பக்கம் திரும்பினாள். ''தேவகி, என்னால் நம்பவே முடியவில்லை! கலாசாலையில் படிக்கும்பொழுது நீ கொண்டிருந்த லட்சியங்கள் எவ்வளவு? வாழ்க்கையைப்பற்றி இருந்த ஆசைகள் எத்தனை! அவை அனைத்தும் இப்படிச் சிதறி உருக் குலைந்துபோய் இருப்பதைக் காண என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது'' என்றாள்.

அந்த வார்த்தைகள் தேவகியைத் திடுக்கிடச் செய்தன. ''நீ சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே! ஏன்? என் வாழ்க்கையில் என்ன குறை இருக்கிறது? அன்பான கணவர், நல்ல குழந்தைகள், இன்பமான குடும்ப நிலை - இதைவிட நான் வாழ்க்கையிலே அதிகம் என்ன எதிர் பார்க்கமுடியும்? என்னைப் பொறுத்தவரை நான் சந்தோஷ மாகத்தான் இருக்கிறேன். இப்படியே இருந்தால் போதும்'' என்றாள், எரிச்சலும் படபடப்பும் நிறைந்த குரலில்.

''குடும்பம்! செக்கிலே கட்டிய மாடுகள்போல் குடும்பத் தில் உழன்று வாழ இந்த நாட்டில் கோடானு கோடிப் பெண்கள் இருக்கிறார்களே! ஆனால் தேவகி, நீயும் அந்தக் கோடிக்கணக்கான பெண்களில் ஒருத்தியாகி விட்டதைக் காண என் மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா? உனக்குக் கிட்டிய அரிய சந்தர்ப்பத்தைப் பாழ்படுத்திக்